2014 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

59—

ஜவுளிப் பூங்கா

*8471—**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரி தொகுதி, எடங்கணசாலை, எளம்பிள்ளை ஆகிய பகுதிகளில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

சங்கரி தொகுதி, எடங்கணசாலை மற்றும் எளம்பிள்ளை பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில் முனைவோர்கள் முன்வருவார்களாயின் இப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில் முனைவோர்கள் முன்வருவார்களானால் நடைமுறையில் உள்ள திட்டங்களின்படி அரசு உதவியுடன் இந்தப் பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு கூறினார்கள். ஜவுளிப் பூங்கா அமைக்க நடைமுறையில் உள்ள திட்டங்களுக்கு எந்தெந்த வகைகளில் அரசு நிதி உதவி செய்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்கள் முன்வருகின்றபோது, தனியாரும், அரசும் சேர்ந்து இதுபோன்ற தொழிற்பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன. ஜவுளித் துறையில் வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும், ஏற்றுமதியைப் பெருக்கவும், சர்வதேசத் தரத்துடன் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன. இந்தியாவிலே இருக்கின்ற 61 ஜவுளிப் பூங்காக்களில், தமிழகத்தில்தான் 6-ல் ஒரு பங்கு, அதாவது 10 ஜவுளிப் பூங்காக்கள் சிறப்பான முறையில் தொடங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது. தொழிற்பூங்காக்கள் அமைப்பதற்கு மத்திய அரசு தனது திட்டத் தொகையில் 40 விழுக்காடு அல்லது 40 கோடி ரூபாய் மானியமாகவும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 9 விழுக்காடு அல்லது 9 கோடி ரூபாய்க்கு மிகாமல் மானியமாகவும் வழங்குகின்றது. தனியார் பங்களிப்போடு அரசும் சேர்ந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்றது. ஜவுளித் துறையில் ஏற்றுமதியை அதிகப்படுத்துவதற்கு இதுபோன்ற திட்டம் தற்போது பயன்பாட்டில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

முற்பகல் 11-05

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 61 ஜவுளி தொழிற்பூங்காக்கள் செயல்பட்டு வருகின்றன என்று கூறினார்கள். அந்த 61 ஜவுளிப் பூங்காக்களில் சேலம் மாவட்டத்தில் எத்தனை ஜவுளிப் பூங்காக்கள் செயல்பட்டு வருகின்றன என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவில் 61 தொழிற்பூங்காக்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் தமிழகத்தில் 10 தொழிற்பூங்காக்கள் இருக்கின்றன. இது அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற தொழிற்*

பூங்காக்கள் மட்டுமல்ல, தனியார் பங்களிப்போடு அரசு தன்னுடைய மூலதனத்தினை, மத்திய அரசும், மாநில அரசும் இதுபோன்று செயல்படுத்திக்கொண்டிருக்கின்றன. இங்கே, இந்திய அளவில் ஒரு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் கோடி அளவிற்கு ஐவுளி ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தமிழகத்திலிருந்து செயல்படுகின்ற 10 தொழிற்பூங்காக்கள்மூலம் ரூபாய் 900 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தமிழகத்தில்தான் மூன்றில் ஒரு பகுதியாக, 45 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறப்பான முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சேலம் மாவட்டத்திற்கென்று தனியாக தொழில் தொடங்குவதற்கு முன்வருவார்களேயானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பகுதியில் சிறப்பான முறையில் வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கும், ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

60—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***4128—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, திருமலைராஜபுரம் அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,